. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 20.04.2026 • மலர் 04 • இதழ்: 110 • Edition : Nagercoil • 20.04.2026 • Vol : 04 • Issue : 110 • Page : 4 • Rs. 5/-

### விருதுநகரில்

# பட்டாசு ஆலையில் விபத்து: பலர் பலி

## முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வேதனை

விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தில் பலர் உயிரிழப்பு மு.க.ஸ்டாலின்வேதனை

சென்னை, ஏப். 20

தமிழகமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

விருதுநகர் மாவட்டம் கட்டனார்பட்டியில் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழந்துள்ள

துயரச் செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மீட்புப் பணிகளை விரைவுபடுத்திக் கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறவும் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு விரையுமாறு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் தங்கம் தென்னரசு ஆகியோரைக் கேட்டுக்கொண்டுள்ளேன்.



இதுகுறித்து அறிந்ததுமே மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு, தேவைப்படும் அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திமுகவினரின் ஊழல் பணம் மீட்டெடுக்கப்படும்

### தென்காசியில் ராஜ்நாத் சிங் பிரசாரம்

தென்காசி, ஏப். 20

தமிழக சட்டசபைக்கான தேர்தல் வருகிற 23 ந்தேதி நடைபெற இருக்கிறது. இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெற்று அன்றைய தினமே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும். இந்த முறை தமிழகத்தில் நான்கு முனை போட்டி நிலவுகிறது.

இதில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளுக்கு ஆதரவாக பிரதமர் மோடி, மத்திய மந்திரி பியூஷ் கோயல் உள்ளிட்டோர் ஏற்கனவே வாக்கு சேகரித்து சென்றனர். தேர்தலுக்கு இன்னும் ஒரு சில நாட்களே உள்ள சூழலில், மத்திய மந்திரிகள் தமிழகத்திற்கு வருகை தந்து தங்களுடைய கூட்டணிக்கு ஆதரவாக தொடர்ந்து பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இன்று தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகு



தியில் களமிறங்கும் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமியை ஆதரித்து மத்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் ரோடு ஷோ கலந்து கொண்டார். பின்னர் அவர் தேர்தல் பிரசாரத்தில் பேசியதாவது:

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்ததற்கு முதல் வரும், அவரது மகனுமே காரணம். கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயத்தால் மக்கள் உயிரிழந்தது திமுகவின் அரசின் அலட்சியத்தாலேயே நடந்தது. திமுக எம்.எல்.ஏக்கள் மணல் கொள்ளை மூலம் ரூ.5,000 கோடி சம்பாதித்து உள்ளனர். திருப்பரங்குன்றத்தில் தீபத்தூணில் தீபம் ஏற்றப்படும். மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை திமுக, காங்கிரஸ் கட்சிகள் தடுத்துவிட்டன மசோதா மீண்டும் நிறைவேற்றப்படும். நிதி மக்களுக்கு செல்லவில்லை, திமுகவினருக்கே சென்றுள்ளது. திமுகவினரின் ஊழல் பணம் மீட்டெடுக்கப்படும். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் பெண்களுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

## விருதுநகர் பட்டாசு ஆலையில் தீ விபத்து: நயினார் நாகேந்திரன் இரங்கல்



விருதுநகர், ஏப்.20

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

விருதுநகர் மாவட்டம் அருகே உள்ள கட்டனார்பட்டியில் இயங்கிவரும் பட்டாசு ஆலையில் நிகழ்ந்த தீ விபத்தில், இதுவரை 17க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.

இக்கொடூரவிபத்தில் பலியானவர்களின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்கள் முழு மன மற்றும் உடல் நலத்துடன் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப வேண்டுமென இறைவனிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

மேலும், கோடைகாலம் துவங்கிவிட்ட நிலையில் வெடிமருந்துகளைப் புழங்கும் பட்டாசு ஆலைகள் அதீத கவனத்துடன் செயல்படுவதோடு, தொழிலாளர்களின் பாதுகாப்பிலும் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலர் உயிரிழப்பு

### செல்வப்பெருந்தகை வேதனை

சென்னை, ஏப்.20

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

விருதுநகர் அருகே கட்டனார்பட்டியில் உள்ள பட்டாசு ஆலையில் இன்று ஏற்பட்ட வெடி விபத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ள செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறேன். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். இத்தகைய வெடிவிபத்து சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதும், அப்பாவித் தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழப்பதும் தொடர்கதையாக நடந்து வருகிறது. இதனை தடுக்கின்ற வகையில் பட்டாசு தொழிற்சாலைகளில் உரிய கட்டுப்பாடுகளை செயல்படுத்தாத காரணத்தால் தான் இத்தகைய விபத்துகள் ஏற்படுகின்



றன. தற்போது கோடை காலம் உக்கிரமாக இருக்கும் நேரத்தில் உரிய பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுடன் பட்டாசு தொழில் ஈடுபடுபவர்கள் இருக்க வேண்டும்.

அதிகாரிகளின் உரிய கண்காணிப்பு இல்லாத நிலையில் தொழிற்சாலை ஒழுங்குமுறை நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. இது போன்ற அலட்சியப் போக்கு குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். விசாரணைகளின் இறுதியில் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து, பாதுகாப்பான முறையில் பட்டாசு தொழில் தொடர்ந்து நடைபெற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், தேர்தல் ஆணையத்தின் அனுமதியுடன் பட்டாசு ஆலை விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்குவதோடு, காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணமும் அரசு செலவில் சிறந்த சிகிச்சையும் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மேலும், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## ஐந்தாண்டுகளில் பட்டாசு ஆலை விபத்தில் 170க்கும் மேற்பட்டோர் சாவு; அன்புமணி கண்டனம்

சென்னை, ஏப்.20

பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

விருதுநகர் அருகே வச்சக்காரப்பட்டியில் உள்ள தனியார் பட்டாசு ஆலையில் இன்று மாலை ஏற்பட்ட பயங்கர விபத்தில் 18 தொழிலாளர்கள் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்தக்கொடிய விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வச்சக்காரப்பட்டி வனஜா பட்டாசு ஆலையில் குறுகிய அறையில் அதிக தொழிலாளர்கள் பணி செய்ததும், பாதுகாப்பற்ற முறையில் வீரியம் மிக்க வெடி மருந்துகள் பயன்படுத்தப்பட்டதும் தான் இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இது அப்பட்டமான விதிமீறல் ஆகும். இத்தகைய விதிமீறல்களை திமுக அரசு கண்டு கொள்ளாதது தான் அப்பாவித் தொழிலாளர்களின் உயிரிழப்புக்கு காரணம் ஆகும். இந்த விபத்துக்கு திமுக தான் பொறுப்பேற்க வேண்டும்.

ஒரே பட்டாசு ஆலையை ஒன்றுக்கும் மேற்பட்டோருக்கு குத்தகைக்கு விடுவதால், ஒரே நேரத்தில் 4 பிரிவினர் அளவுக்கு அதிகமாக பட்டாசு தயாரிக்க முயல்வது, நாள் கூலிக்கு பதி



லாக, உற்பத்தி செய்யப்படும் பட்டாசுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஊதியம் வழங்கும் முறை கொண்டு வரப்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் மிகவும் வேகமாக பட்டாசு தயாரிப்பது ஆகியவை தான் விபத்துகளுக்கு காரணமாகும்

இந்த ஆபத்தான முறைகளை தடுக்க வேண்டும்; கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும் என்று திமுக அரசை பாட்டாளி மக்கள் கட்சி பல முறை வலியுறுத்தியுள்ளது. ஆனால், அடி முதல் நுனி வரை அனைத்து நிலைகளிலும் ஊழல் ஊடுருவியுள்ள திமுக அரசின் நிர்வாகத்தில் விதிமீறல்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை. திமுகவின் இந்த தீய நடவடிக்கைகளால் தான் அப்பாவிகளின் உயிரிழப்புகள் தொடர்கின்றன.

2025ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 16 பட்டாசு விபத்துகள் நடந்தன. அவற்றில் 37 பேர் உயிரிழந்தனர். நடப்பாண்டில் இதுவரை நடந்த பட்டாசு ஆலை விபத்துகளில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 25ஐ தாண்டியுள்ளது. இன்றைய விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. திமுக ஆட்சியில் மட்டும் 170க்கும் மேற்பட்ட பட்டாசு ஆலை தொழிலாளர்கள் விபத்துகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர். பட்டாசு ஆலை விபத்துகளைத் தடுப்பதற்கும், பட்டாசு ஆலை தொழிலாளர்களையும் பாதுகாப்பதற்கு துப்பற்ற அரசு திமுக அரசு என்பதற்கு இது தான் மோசமான எடுத்துக்காட்டு ஆகும்.

வச்சக்காரப்பட்டி பட்டாசு ஆலை விபத்தில் காயமடைந்து உயிருக்கு போராடும் தொழிலாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த மருத்துவம் அளிக்கப்பட வேண்டும். தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.25 லட்சம் வீதமும், காயமடைந்தோருக்கு தலா ரூ.5 லட்சம் வீதமும் இழப்பீடு வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் பட்டாசு ஆலை விபத்துகளைக் கட்டுப்படுத்த புதிய கொள்கைகள் வகுக்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நுண் பார்வையாளர்களுக்கான தேர்தல் பயிற்சி: கலெக்டர் வழங்கினார்



நாகர்கோவில், ஏப்.20
குமரியில் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடைமுறைகளைத் துல்லியமாகவும், வெளிப்படையாகவும் கண்காணிக்கும் வகையில், நுண் பார்வையாளர்களுக்கான சிறப்பு பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் நிகழ்ச்சி நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது.

குமரி மாவட்டத்தில் 137 நுண் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த பயிற்சி முகாமில், வாக்குப்பதிவு நாளன்று நுண் பார்வையாளர்கள் மேற்கொள்ள வேண்டியபணிகள்குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. வாக்குப்பதிவு மையங்களில் தேர்தல் விதிகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். மாதிரி வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன் நடத்தப்படும் மாதிரி வாக்குப்பதிவு நடைமுறைகளை உறுதி செய்ய வேண்டும். வாக்குப்பதிவு நிறைவடைந்தவுடன், தேர்தல் பொதுப் பார்வையாளரிடம் சீல் வைக்கப்பட்ட உறையில் விரிவான அறிக்கையை நேரடியாகச் சமர்ப்பிக்க வேண்டும். தேர்தல் களத்தில் நுண் பார்வையாளர்களின் பங்கு மிக முக்கியமானது.

எவ்விதப் புகாருக்கும் இடமளிக்காத வகையில், மிகுந்த நடுநிலையோடும் விழிப்புணர்வோடும் பணியாற்ற வேண்டும். தேர்தல் ஆணையத்தின் புதிய வழிகாட்டுதல்கள் மற்றும் செயலிகள் மூலம் எவ்வாறு தகவல்களைப் பரிமாறிக் கொள்வது என்பது குறித்தும், வாக்குச்சாவடியில் ஏதேனும் அசம்பாவிதங்கள் அல்லது விதிமீறல்கள் நடந்தால் உடனடியாக பொது பார்வையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கும் முறை குறித்தும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் நுண் பார்வையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் அவர்களுடைய பணிகள் பொறுப்புகள், செய்ய வேண்டியவை செய்ய கூடாதவை பற்றிய விரிவான விளக்கம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பொதுபார்வையாளர் சுபஸ்ரீ நந்தா, தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா கலந்து கொண்டு விளக்கமளித்தார். அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# வாக்கு சவடிகளுக்கு தேர்தல் பொருட்கள் அனுப்பும் பணி: கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஏப்.20
கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு, வாக்குச்சாவடிகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மண்டல வாரியாகப் பிரிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதை கலெக்டர் அழகுமீனா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது.

குறிப்பாக அழியாத மை, படிவங்கள், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான கையேடுகள், கைப்பேசி பாதுகாப்பு உறை, தீப்பெட்டி, பசை, ரப்பர் முத்திரை, மெழுகுவர்த்தி, ஸ்டாம்ப்பேட் மற்றும் இதர எழுதுபொருட்கள் முறையாகப் பிரிக்கப்பட்டுள்ளதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேர்தல் நாளன்று வாக்குச்சாவடிகளுக்கு இந்தப் பொருட்களைச் சரியான நேரத்தில் கொண்டு சேர்ப்பதற்கான வாகன வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அந்தந்த சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. தேர்தல் பணிகளில் எந்தவிதத் தொய்வும் இன்றி, விதிமுறைகளை முறையாகப் பின்பற்றிச் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

நடைபெற்ற ஆய்வில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் புஷ்பாதேவி, உதவி சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்

## தென்காசி நகர முக்கிய கடை வீதிகளில்

# திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் தீவிர பிரச்சாரம்



தென்காசி ஏப்ரல் 20
தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன், தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர் தலைமையில் தென்காசி நகர முக்கிய கடை வீதிகள் ,சுவாமி சன்னதி பஜார், அம்மன் சன்னதி பஜார், தெற்கு ரத வீதி, வடக்குரதவீதிகளில்உள்ளஅனைத்து கடைகளிலும் ஒவ்வொரு கடையாக ஏறி ,இறங்கி திமுக தேர்தல் வாக்குறுதி அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்தார் அப்போது அவருடன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் உடன் சென்று கடை வீதிகளில் பிரச்சாரம் செய்தனர் இறுதியாக தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கலை கதிரவன் தென்காசி அருள்மிகு காசி விசுவநாதர் ஆலய பகுதியில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார் பின்னர் அவர் பேசியதாவது முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் திமுக அரசு திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்த உடன் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 திலிருந்து ரூ.2000 ஆக ,புதுமைப்பெண் திட்டம் ரூ.1000 திலிருந்து ரூ.1500 ஆக ,தமிழ் புதல்வன் திட்டம் ரூ.1000 திருந்து ரூ.1500 ஆக, முதியோர் உதவித்தொகை ரூ.1200 லிருந்து ரூ.2000 ஆக, மாற்றுத்திறனாளி உதவித்தொகை ரூ.1500 லிருந்து ரூ. 2500 ஆக, நெல் கொள்முதல் ரூ.2500 ல் இருந்து ரூ.3500 ஆக, தொழிலாளர்

நலவாரிய ஓய்வூதியம் ரூ.1200 திலிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறினார் மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக ஆட்சியில் நூற்றுக்கணக்கான கோவில்கள் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது அதே போல் மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் இன்னும் நூற்றுக்கணக்கான கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்படும். தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயத்தில் இரண்டு தேர்களில் ஒரு தேர் இயங்கவில்லை என்று என்னிடம் கூறினார்கள் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் அந்த தேர் சரி செய்யப்பட்டு அடுத்த ஆண்டு தேரோட்டத்தில் இரண்டு தேர்களும் ஓடும் என்று வாக்குறுதி அளித்தார் இந்நிகழ்ச்சியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

# தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் திமுகவுக்கு ஆதரவு தேவராஜன் அறிக்கை



தருமபுரி ஏப்ரல் 20
தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இதைத்தொடர்ந்து தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் தருமபுரி திட்ட செயலாளர் என் . தேவராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்கள் மேலும் மேலும் செழித்திட! ,மகளிர் வென்றிட!, நாட்டின் உள் கட்டமைப்பு மேம்பட,! இளைஞர்கள் முன்னேற்றம் கண்டிட! விவசாயிகள் மகிழ்ந்திட! தமிழ்நாடு தழைத்திட! மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள்நிரந்தரம்கண்டிட !அனைத்துதரப்புமக்களுக்கும் கடந்த ஐந்து ஆண்டு காலங்களில் பல்வேறு சலுகைகளை வாரி வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞரின் இளவல் "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்" அவர்களின் திராவிட "மாடல் ஆட்சி" தொடர்ந்திட! மலர்ந்திட! தமிழ்நாடு வென்றிட! வரும் சட்டப்பேரவை பொதுத் தேர்தல் 2026 இல் 200 க்கும் அதிகமான தொகுதிகளில், மாபெரும் வெற்றி! மகத்தான வெற்றி! வரலாற்று சிறப்புமிக்க வெற்றி !பெற்று 2.0 ஆட்சி அமைத்திட, "தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் "தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கிளைகளின் சார்பாக பேராதரவு அளிக்கிறது இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



## தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# விவசாயிக்கு ஆபத்தான அறுவை சிகிச்சையில் வெற்றி: டாக்டர்கள் குழுவுக்கு பாராட்டு

தஞ்சாவூர் ஏப்ரல் 20
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விவசாயிக்கு அதிக ஆபத்தான அறுவை சிகிச் சை வெற்றிகரமாக செய்த டாக்டர் கள் குழுவுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது

தஞ்சாவூர்மாவட்டம் பட்டுக்கோட் டையைச்சேர்ந்த 56 வயதான விவசாயி வயிற்று வலி காரணமா க தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டார்

அவருக்குஎம்.ஆர்.ஆர்ட்டோகிராம் பரிசோதனை செய்து பார்த்தபோது வயிற்று பகுதியில் உள்ள முக்கியமான ரத்தநாளமான பெருந்தமனி ஆபத்தானஅளவில் விரிவடைந்து அபாயகரமான நிலையில் வெடிக் கும் தருவாயில் பெருதமனி வீக்கம் இருப்பது கண்டறியப்பட்டது .இது உயிருக்கு ஆபத்தான நிலை என்பதால் நோயாளிக்கு உடனடி யாக அவசர அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

கல்லூரி முதல்வர் பூவதி வழிகாட்டுதலின் கீழ் ,ரத்த நாள அறுவை சிகிச்சை நிபுணர் சண்முக வேலாயுதம், மயக்க மருத் துவ துறையின் தலைவர் சாந்தி பால்ராஜ் ஆகியோரால் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது, டாக்டர்கள் மோகன் ராஜா, முரளி ,கபிலன் ஆகியோரும் இந்த குழுவில் இடம் பெற்றனர். வெற்றிகரமாக நடந்த இந்த அறுவை சிகிச்சையில் பாதிக்கப்பட்ட பெருந்தமனியின் பகுதி செயற்கை நாளத்தால் மாற்றப்பட்டு, வெடிப்பு ஏற்படும் அபாய முற்றிலும் நீக்கப்பட்டது தற்போது நோயாளி பூரணகுலம் குணமடைந்து முழு நலத்துடன் உள்ளார்

இந்த அறுவை சிகிச்சைதனியார் மருத்துவமனையில் செய்தால் ரூபாய் 10 லட்சம் வரை செலவாகும் என்றும் ,தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் முதல் அமைச்சரின் விரிவான உடல்நலக் காப்பீடு திட்டத்தின் கீழ் இச்சிகிச்சை முழுவதும் இலவசமாக செய்யப் பட்டது என்றும், டாக்டர்கள் தெரிவித் தனர் . அறுவை சிகிச்சை வெற்றி கரமாக செய்த டாக்டர்கள் குழு வினரை முதல்வர் பூவதி பாராட்டினார் மேலும் பல்வேறு தரப்பில் இருந்தும் டாக்டர்களுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.



## தருமபுரி சட்டமன்றத் தொகுதியில்

# பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பு

தருமபுரி ஏப்ரல் 20
தருமபுரி சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் பாளையம் புதூர் கோம்பை சாமி செட்டிபட்டி மற்றும் 30 க்கும் மேற்பட்ட பகுதிகளில் சென்று வேட்பாளர் சௌமியா அன்புமணி மாம்பழம் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். அப்போது அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது. அதிமுக தலைமையிலான அரசு அமைந்தவுடன் மகளிர் உரிமை தொகை ரூ. 2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். காவேரியிலிருந்து கடலில் கலக்கும் உபரி நீரை மீன் மோட்டார் மூலம் ஏரி, குளம் ஆகியவைகளில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் . சிப்காட் பணி நிறைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தருமபுரி முதல் மொரப்பூர் வரை ரயில்வே பணி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் . மேலும் 108 ஆம்புலன்ஸ், தருமபுரி மருத்துவ கல்லூரி ஆகியவைகளை பெற்று தந்தது பாமக தான் என்றார். பாஜக மாவட்ட செயலாளர் சரவணன், பாமக மாவட்ட செயலாளர்கள் எஸ்.பி. வெங்கடேஸ்வரன், அரசாங்கம் ,அதிமுக நல்லம்பள்ளி ஒன்றிய செயலாளர் சிவப்பிரகாசம் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.



## பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி

# திமுக வேட்பாளர் பி. பழனியப்பன் மக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பு

தருமபுரி ஏப்ரல் 20
தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பி. பழனியப்பன் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்கு உட்பட்ட கடத்தூர், வகுத்தபட்டி, மெனசி, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராமங்களில் சூறாவளிசுற்றுப்பயணம்செய்து தனக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அப்போது அவர் பேசுகையில் திமுக அரசின் 5 ஆண்டு ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு நெல் கொள்முதல் குவிண்டாலுக்கு விலை ரூ. 3,500, கரும்பு டன் ரூ. 4,000 வழங்கப்படும். பால் கொள்முதல் விலை ஐந்து உயர்த்தி தரப்படும். மீட்டர் பொருத்தாமல் நவீன மின்சார பம்புசெட்டுகள் வழங்கப்படும். கலைஞர் உரிமைத்தொகை ஆயிரத்தில் இருந்து ரூ.2,000 ஆக வழங்கப்படும். சத்துணவு காலை உணவு திட்டம் ஐந்தாம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்யப்படும் என்றார். இந்த பிரச்சாரத்தின் போது ஒன்றிய செயலாளர்சரவணன்உள்ளிட்ட கூட்டணி கட்சிகளில் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## தமிழகத்தில் ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது

# மார்த்தாண்டத்தில் சமக கட்சி தலைவர் சரத்குமார் பிரச்சாரம்

மார்த்தாண்டம், ஏப்.20
சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு கேட்டு நாகர்கோவில், வேர்கிளம்பி, மார்த்தாண்டம் போன்ற பகுதிகளில் பரப்புரை மேற்கொண்டுள்ளார்.

தொடர்ந்து விளவங்கோடு தொகுதி பாஜக வேட்பாளர் விஜயதரணியை ஆதரித்து மார்த்தாண்டம் பேருந்து நிலைய சந்திப்பில் சரத்குமார் நேற்று முன்தினம் இரவு பரப்புரை மேற்கொண்டார். அப்போது அவர் பேசுகையில்:

தமிழகத்தில் 5 வயது சிறுமி முதல் 80 வயது மூதாட்டி வரை பாலியல் பலாத்காரங்கள். மகளிருக்கு பாதுகாப்பு இல்லை. தமிழகத்தில் எந்த வளர்ச்சியும் இது வரை நடக்கவில்லை. மோடி அரசின் வளர்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இருக்கின்றன தமிழகத்தில் நிதி இல்லை தூய்மை பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய நிதி இல்லை, பகுதி நேர ஆசிரியர்களை பணி நியமனம் செய்ய நிதி இல்லை ,சம வேலைக்கு சம உரிமை கொடுக்க நிதி இல்லை, மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வு செய்ய நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்கிறீர்கள். கடந்த 11 ஆண்டுகளில் பிரதமர் மோடி ரூ. 11 லட்சம் கோடி தமிழகத்திற்கு வளர்ச்சி திட்டங்களுக்காக தந்திருக்கிறார். ஆனால் நீங்கள் தமிழகத்தின் கடனை ஐந்து கோடி அதிகரித்து இருக்கிறீர்கள்.கடன் மேலும் மேலும் அதிகரித்து இருக்கிறீர்கள் தி மு க அரசு தமிழகத்தை நீங்கள் வளர்சி பாதைக்கு எடுத்து செல்லவில்லை. ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது. தமிழகம் எதை நோக்கி செல்கிறது? மகளிர் மசோதாவை தோற்கடித்து கொண்டிருக்கிறோம் என்று பெருமை தட்டி கொண்டிருக்கிறார்கள்.

தேசிய ஜனநாயக கூட்டணி உருவாக்கப்பட்டு எடப்பாடி பழனிசாமி மீண்டும் தமிழகத்தின் முதல்வராக வருவார். தேசிய ஜனநாயக கூட்டணி டபிள் என்ஜின் ஆக இரட்டை குழல் துப்பாக்கியாக செயல்பட்டு மத்தியிலும், மாநிலத்திலும நல்லாட்சி அமைக்கப்பட்டு பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்படும் என்றும் சரத்குமார் பேசினார்.



# கோவை சூலூர் சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் என் எம் சுகுமார் வாக்கு சேகரித்தார்

கோவை ஏப்:20

கோவை மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் என் எம் சுகுமார் சாமளா புரம், எம்ஜிஆர் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் நேரில் சென்று சந்தித்தார். அப்பொதுமக்கள் இந்த பகுதியில் சுடுகாடு மைதானம், சமுதாயக்கூடம், மின்விளக்குகள், ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தனர். இவை அனைத்தும் தலைவர் இடத்தில் சொல்லி இந்த குறைகளை தீர்ப்பேன் என்று விசில் சின்னத்திற்கு வாக்கு அளிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் தொண்டர்கள் ஏராளமான கலந்து கொண்டு வாக்கு சேகரித்தினர்.




தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு

# மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் திட்ட களப்பணியாளர்களுடன் கலந்தாய்வு

தஞ்சாவூர் ஏப்ரல் 20

தஞ்சாவூர் மாவட்டத்தில் 20 26 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளி களுக்கான உரிமைகள் திட்ட களப்பணியாளர்களுடன்கலந்தாய்வுநடைபெற்றதுதஞ்சாவூர்மாவட்ட மாற்றுத்திற னாளிகள் நலத்துறை சார்பில் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட கலெக்டர்மான பிரியங்கா பங்கஜம் அவர்கள் மாற்றுத்திறனா ளிகளுக்கான உரிமைகள் திட்ட களப்பணியாளர்களுடன் மாற்றுத் திறனாளிகள் பிரெயிலி முறையில் 100 சதவீதம் வாக்களிப்பது தொடர்பாக கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது



# மயிலாடி சிற்பக்கலை உலக அளவில் செல்ல நடவடிக்கை: பி.டி.செல்வகுமார் உறுதி

## அதிமுக வேட்பாளர் தளவாய்சுந்தரத்தை ஆதரித்து தீவிர பிரச்சாரம்

நாகர்கோவில், ஏப்.20

கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி சிற்பக்கலை உலக அளவில் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என பி.டி.செல்வகுமார் கூறினார்.

கன்னியாகுமரி தொகுதி வேட்பாளர் தளவாய்சுந்தரத்தை ஆதரித்து கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி. செல்வகுமார் நல்லூர், இரவிபுதூர், மருங்கூர், குமாரபுரம் தோப்பூர், அமராவதிவிளை, மயிலாடி உள்ளிட்ட பகுதிகளில் வாக்கு சேகரித்து பேசியதாவது;

கன்னியாகுமரி தொகுதியில் தளவாய் சுந்தரம் வெற்றி பெறும் பட்சத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் புகழ்பெற்று விளங்கும் மருந்துவாழ்மலையில் பக்தர்கள் கிரிவலம் செல்ல வசதியாக பாதையை சீரமைக்கவும், அங்கு உயர் கோபுர மின்விளக்குகள் மற்றும் மின் விளக்குகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், திருவண்ணாமலை கிரிவலம் போன்று புகழ்பெற வைக்க அனைத்து முயற்சியும் எ டு க் க ப் ப டு ம் . மயிலாடி சிற்பக் கலைஞர்களுக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். தோவாளை சானல் கரையோர சாலைகள்தரமானமுறையில்சீரமைக்கப்படும். இந்த பிரச்சாரத்தில் தாடி பாலாஜி பேசும்போது, நல்லவர்களுக்கு வாக்கு சேகரிக்க வந்துள்ளேன். இத்தொகுதியின் வேட்பாளர் தளவாய்சுந்தரம் அவரது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை தொகுதி முழுக்க சிறப்பாக ப யன் ப டு த் தி யு ள் ள ா ர் . பி.டி.செல்வகுமாரைப் பொருத்தவரை கலப்பை மக்கள் இயக்கம் மூலமாக மயிலாடி ரிங்கல் தௌபே பள்ளிக்கு கலையரங்கம், மயிலாடி காமராஜர் நகரில் செபஸ்தியார் ஆலயம் மற்றும் இப்பகுதியில் பல்வேறு அரசுப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து வாழும் காமராஜராக திகழ்கிறார். நாங்கள் ஒன்றிணைந்து தொகுதி முழுவதும் வாக்கு சேகரித்து வருகிறோம். மக்கள் மத்தியில் ஆட்சி மாற்றம் என்ற ஒற்றை கோஷம் எழுந்துள்ளதை பார்க்க முடிகிறது. எனவே இரட்டை இலை வெல்லும் என தாடி பாலாஜி பேசினார். பிரச்சாரத்தின் போது அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜெஸீம், மருங்கூர் பேரூராட்சி தலைவர் லட்சுமி சீனிவாசன், மயிலாடி பேரூராட்சி தலைவர் விஜயலட்சுமி பாபு, குமரி மாவட்ட கலப்பை மக்கள் இயக்க தலைவர் வக்கீல் பாலகிருஷ்ணன், மயிலாடி பேரூராட்சி அதிமுக செயலாளர் மனேகரன், நல்லூர் ஊராட்சி செயலாளர் லெட்சுமணன், பிரவீன், கலப்பை மகளிர் அணி அமைப்பாளர் அனிதா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு.தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா என்ற தலைப்பின் கீழ், 100 சதவிகிதம் வாக்குப்பதிவு வலியுறுத்தி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, காமராஜ் காலனி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஓசூர், தளி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் .பண்வே ராகுல் துக்காராம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நடைபயண பேரணி மற்றும் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை துவக்கி வைத்தனர். உடன் ஓசூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவவலர் .ஆக்ரிதி சேத்தி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# பெண்கள் பூரிப்போடு வரவேற்பதே தி.மு.க.வின் வெற்றியை காட்டுகிறது

## மதியழகன் எம்.எல்.ஏ., பெருமிதம்



கிருஷ்ணகிரி, ஏப். 19

"செல்லும் இடங்களில் எல்லாம் பெண்கள் பூரிப்போடு வரவேற்பு அளிப்பதே, வரும் தேர்தலில், தி.மு.க.,வின் அமோக வெற்றிக்கான முன்னோ ட்டமாக இருக்கிறது," என மதியழகன் எம்.எல்.ஏ., பேசினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டணம் அடுத்த மாரிசெட்டிஹள்ளி, மற்றும் பட்லப்பள்ளி சுற்றுவட்டார கிராமங்களில், தி.மு.க., வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது, பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

தமிழகத்தில் கடந்த, 5 ஆண்டு கால, தி.மு.க., ஆட்சியின் சாதனைகளை பார்த்து, பா.ஜ., மற்றும், அ.தி.மு.க.,விற்கு பயம் அதிகரித்துள்ளது. அதை மறைக்க, பல்வேறு முயற்சிகளை மத்திய, பா.ஜ., அரசு செய்கிறது. அடிமை, அ.தி.மு.க.,வையும், சிதறி கிடக்கும் அவர்கள் கட்சியினரையும் மிரட்டி ஒரு கூட்டணிக்குள் அடைத்து பார்த்தது; மக்கள் ஏற்கவில்லை. 10,000 ரூபாய் தருகிறோம், காஸ் தருகிறோம், வீடு தருகிறோம் என்றனர் ; மக்கள் ஏற்கவில்லை. இதையடுத்து மகளிர் மசோதாவை நிறைவேற்ற தென் மாநிலங்கள் விடவில்லை என பொய் தகவலையும் பரப்பி பார்த்தனர் ; மக்கள் ஏற்கவில்லை. மகளிர் விடியல் பயணம், உரிமைத்தொகை, புதுமைப்பெண், அன்புக்கரங்கள், நான் முதல்வன், மகளிர் சுய உதவிக்குழுக்கடன் என பெண்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை மட்டுமே பெண்கள் ஏற்று கொண்டுள்ளனர்.

தொகுதிகள் தோறும், செல்லும் இடங்களில் எல்லாம் பெண்கள் பூரிப்போடு வரவேற்பு அளிப்பதே, வரும் தேர்தலில், தி.மு.க.,வின் அமோக வெற்றிக்கான முன்னோட்டமாக இருக்கிறது. சொன்னதை செய்வது, தி.மு.க., அரசு என அவர்கள் மனதில் ஆழமாக பதிந்துள்ளது. அவர்கள் தற்போது கேட்கும் கோரிக்கைகளை செய்து கொடுத்தாலே இன்னும், 10 ஆண்டுகள், தி.மு.க., ஆட்சிதான் என்பதை மக்கள் சொல்லாமல் செ ா ல் கின் ற ன ர் . இவ்வாறு அவர் பேசினார்.

# 100 சதவீத ஓட்டுப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி



கிருஷ்ணகிரியில், 100 சதவீத ஓட்டுப்பதிவை வலியுறுத்தி, 2,500 பேர் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார், துவக்கிவைத்தார்.கிருஷ்ணகிரிமாவட்ட நிர்வாகம் சார்பில், வரும், 23ல் நடக்கவுள்ள சட்டசபை தேர்தலில், 100 சதவீத ஓட்டுப்பதிவை வலியுறுத்தி, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று, கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், மாணவ, மாணவியர், வணிகர்கள், பொதுமக்கள் உள்பட, 2,500 பேர் கலந்து கொண்ட, தேர்தல் விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார், கொடியசைத்து துவக்கி வைத்து பேசியதாவது:மாவட்ட நிர்வாகம் சார்பில், 100 சதவீத விழிப்புணர்வை வலியுறுத்தி, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. நடக்கும் விழிப்புணர்வு பேரணியின் நோக்கம், அனைவரும் நேர்மையாக மனசாட்சி படி ஓட்டளிக்க வேண்டும். தேர்தல் நாளில் அனைவரின் விரலிலும் ஓட்டுப்போடத்தற்கான மை இருக்க வேண்டும். அனைவரும் தங்கள் உறவினர், சுற்றத்தாரையும் ஓட்டுப்போட வலியுறுத்த வேண்டும் என்பதாகும். இவ்வாறு, அவர் பேசினார். மாவட்ட விளையாட்டு அரங்கில் துவங்கிய பேரணி, ராயக்கோட்டை சாலை, பஸ் ஸ்டாண்ட், பழையபேட்டை, டி.பி. சாலை, காந்தி சாலை, பழைய பஸ் ஸ்டாண்ட், தர்மராஜா கோவில் சாலை, பெங்களூரு சாலை, லண்டன்பேட்டை வழியாக மீண்டும் மாவட்ட விளையாட்டு அரங்கில் நிறைவடைந்தது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பெ. தங்கதுரை, இ. கா. ப ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் அமீர்பாஷா மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தமிழக ஆயர் பேரவை அச்சிட்டதாக போலி நோட்டீஸ்

## திமுக பேரூராட்சி தலைவியின் கணவன் உட்பட சிலர் கைது

நாகர்கோவில், ஏப்.20

பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாகக்கோடு, கொக்கோட்டுமூலை, குலசேகரம், பாயிக்காடு, புலியிறிங்கி ஆகிய 5 பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ தேவாலய மக்களிடம், திமுக கூட்டணி கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் எனக் கூறி துண்டு பிரச்சாரம் வழங்கப்பட்டதாக பரபரப்பு ஏற்பட்டது. இந்த துண்டு பிரச்சாரம், திருவட்டார் பேரூராட்சி தலைவியின் கணவர் ரமேஷ் என்பவர் தலைமையில் வழங்கியதாக கூறப்படுகிறது.

இதனை அறிந்த தமிழக வெற்றி கழகம் கட்சி தொண்டர்கள், துண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்களைதடுத்து நிறுத்தி, உடனடியாக திருவட்டார் போலீசார் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கு தகவல் அளித்தனர். தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த திருவட்டார் போலீசார் மற்றும் தேர்தல் அதிகாரிகள், துண்டு பிரச்சாரம் செய்தவர்களை அழைத்து சென்று திருவட்டார் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இது போன்று குழித்துறை மறைமாவட்டம் சார்பில் ஒரு துண்டுப் பிரசுரம் தயார் செய்யப்பட்டு நேற்று ஞாயிறுகாலைதேவாலயங்களில்திருப்பலிமுடிந்ததும் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

அந்த நோட்டீஸில் குறிப்பாக, திமுக காங்கிரஸ் கூட்டணிக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்றும், மற்ற கட்சிகள் அனைத்தும் மதவாதக் கட்சிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை மீறும் செயலாகும் என பங்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தொடந்து இதனைத் தடுக்கக் கோரி குழித்துறை ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட ஆயரை சந்தித்து புகார் மனு அளிக்க வந்தனர். ஆனால் ஆயர் சந்திக்காத காரணத்தால் போராட்டம் நடத்தினர்.

# தேர்தல் பிரச்சார விதி மீறல் சரத்குமார் மீது வழக்கு பதிவு

நாகர்கோவில், ஏப் 20

தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் சமத்துவ மக்கள்கட்சி தலைவரும், பாரதிய ஜனதாகட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினருமான சரத்குமார் தமிழகம் முழுவதும் பாரதிய ஜனதா மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் போட்டியிடும் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார். வேர்கிளம்பி பகுதியில் பத்மநாபபுரம் தொகுதி பாஜக வேட்பாளர் ரமேஷை ஆதரித்து பிரச்சாரம் செய்தபோது பட்டாசுகள் வெடித்ததாகவும், போக்குவரத்து இடையூறாக வாகனங்களை நிறுத்தியதாகவும், அனுமதிக்கப்பட்ட நேரத்தை தாண்டியும் பிரச்சாரம் செய்ததாகவும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சத்திய சோபன் புகார் அளித்தார். அதன் பேரில் சரத்குமார், வேட்பாளர் ரமேஷ், அதிமுக மாவட்டச் செயலாளர் சுதர்சன், பாரதிய ஜனதா இளைஞரணி மாவட்ட செயலாளர் ரஞ்சித் உட்பட 10க்கும் மேற்பட்டோர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# விஜய்யின் தலையை பதம்பார்த்த கூல்ட்ரிங் பாட்டில்

## பேசாமல் புறப்பட்டு சென்ற விஜய்:



திருச்சி, ஏப். 20

திருச்சி கிழக்குத் தொகுதியில் இன்று (ஏப். 19) தவெக தலைவர் விஜய் திறந்தவெளி வாகனத்தில் ரோடு ஷோ மூலம் பிரசாரம் மேற்கொண்டார். வழிநெடுகிலும் தொண்டர்கள் மலர் தூவியும், கட்சித் துண்டுகளை வீசியும் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, கூட்டத்திலிருந்து வீசப்பட்ட கூல்ட்ரிங்க்ஸ் பாட்டில் ஒன்று எதிர்பாராதவிதமாக விஜய்யின் தலையில் பட்டது. இதனால் அவர் தலையில் கைவைத்தபடி கூட்டத்தைப் பார்த்த சம்பவம் அங்கு சற்று பரபரப்பை ஏற்படுத்தியது.

அதைத்தொடர்ந்து கிழக்கு தொகுதியில்சாலைவலம் மேற்கொண்டு பரப்புரை செய்த விஜய் மும்மத வழிபாடு செய்தநிலையில் ஒருவார்த்தைகூட பேசாமல் பரப்புரையை முடித்துக்கொண்டு சென்னைக்கு புறப்பட்டார். 3 இடங்களில் பேச போலீசார் அனுமதி கொடுத்த நிலையில் அவர் பேசாமல் புறப்பட்டு சென்றது தவெக தொண்டர்களை ஏமாற்றமடைய செய்துள்ளது.

முசிறி:

# 2 பைக் மோதி விபத்து; சிறுவன் பலி

திருச்சி, ஏப். 20

துறையூர் அருகே ஆழத்துடையான் பட்டியைச் சேர்ந்த பவன், தனது மகன்கள் மோகித் (13) மற்றும் வசந்தகுமார் (14) ஆகியோருடன் இருசக்கர வாகனத்தில் தாப்பேட்டை அருகே சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த மற்றொரு இருசக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் மோகித் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். தகவலறிந்த தாப்பேட்டை போலீசார், உயிரிழந்த சிறுவனின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து, விபத்து குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு



தருமபுரி, ஏப். 20

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி, தருமபுரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ விஜய் வித்யாலயா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீனிவாசா பொறியியல் கல்லூரியில் வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர். ஹீரா லால் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு தேர்தல் பணிகள் சம்மந்தமாக பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

தேர்தல் பயிற்சி வகுப்பில் வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு தபால் வாக்குகளை அளித்திட ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள தபால் வாக்கு பெட்டியில் தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அவர்களுடைய வாக்குகள் செலுத்துவதை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர்.ஹீரா லால், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், முன்னிலையில் இன்று நேரில் பார்வையிட்டார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தொடர்பான தேர்தல் அறிவிப்பு அட்டவணையானது 15.03.2026 அன்று வெளியிடப்பட்டது. இந்நேர்வில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் எதிர்வரும் 23.04.2026 (வியாழக்கிழமை) அன்று நடைபெறுவதை முன்னிட்டு, தருமபுரி மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் ஐந்து சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சியானது, 057 பாலக்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், 058 பென்னாகரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ விநாயகா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியிலும், 059தருமபுரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ விஜய் வித்யாலயா ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், 060 பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீனிவாசா பொறியியல் கல்லூரியிலும், 061அரூர்(தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெயம் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும் இன்றைய தினம் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

மேலும், தேர்தல் நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு தொடர்புடைய பயிற்சி மையங்களில் தபால் வாக்கு செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு இன்று தபால் வாக்குப்பதிவு நடைபெற்றது. அதன்படி, தருமபுரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ விஜய் வித்யாலயா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீனிவாசா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தபால் வாக்குப்பதிவினை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர்.ஹீரா லால், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், ஆகியோர் நேரில் பார்வையிட்டார்கள்.

# சட்டசபை தேர்தலை முன்னிட்டு 4 நாட்கள் மதுக்கடைகள் மூடல்

கிருஷ்ணகிரி, ஏப்.20

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ் குமார்,இ.ஆ.ப அவர்கள்வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக சட்டசபை தேர்தல் வரும், 23ல், நடக்கிறது. இதை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மதுக்கடைகள், மதுக்கூடங்கள் அனைத்தும் வரும், 21, காலை, 10:00 மணி முதல், 23 இரவு, 12:00 மணி வரை மூடப்படுகிறது. அதே போல ஓட்டுப்பதிவு நாளான மே, 4ல் மதுக்கடைகள் மூடப்படுகிறது. விதிமுறைகளை மீறி, விற்பனை செய்தாலோ, மதுபானங்களை கொண்டு சென்றாலோ சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தலை முன்னிட்டு மதுபானக் கடைகள் முழுவதுமாக மூடப்படும்: கலெக்டர் தகவல்

சிவகங்கை, ஏப். 20

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, வரு கின்ற 21.04.2026 முதல் 23.04.2026 வரை மூன்று நாட்கள் மற்றும் 04.05.2026 வாக்கு எண்ணிக்கை நாளன்றும், காலை 10.00 மணிமுதல் இரவு 12.00 மணி வரை அரசு மதுபானக் கடைகள்,1, 2, 3 உரிமம் பெற்ற ஹோட்டல் கள் மற்றும் மனமகிழ் மன்றங்கள், மேற்படி தினத்தில் மூட தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபானக்கடைகள் அத்துடன் செயல்படும் மதுக்கூடங்கள் மற்றும் 1, 2, 3 உரிமம் பெற்ற கிளப், ஹோட்டல்கள், மது அருந்தும் கூடங்கள் ஆகியவை மேற்குறிப்பிடப்பட் டுள்ள தினங்களில் முழுவது மாக மூடப் படும் என மாவட்ட கலெக்டர் கா.பொற் கொடி, தெரிவித்துள் ளார்.



## தஞ்சாவூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்

# தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா

தஞ்சாவூர் ஏப்ரல் 20

2026 தமிழ்நாடு சட்டமன்ற த்தேர்தலை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின்பெருவிழா என்னும் 100 சதவீத வாக்களிக்க வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு நடைபெற்றது.

அது சமயம் தேர்தல் விழிப்பு ணர்வு கோலத்தி னை மாவட்ட தேர்தல் அலுவலரும் ,மாவட்ட கலெக்டருமான பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டார் அங்கு வைக்கப்பட்டிருந்த உறுதி மொழியில் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்.

## நாகர்கோவிலில்

# இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காக தொழிற்பேட்டைகள்: பாஜ வேட்பாளர் எம் ஆர் காந்தி பிரச்சாரம்



நாகர்கோவில், எப். 20

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளர் எம் ஆர் காந்தி எம்எல்ஏ தொகுதி முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். வாக்காளர்களை நேரில் சந்தித்து தாமரை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகிறார். அவர் செல்லும் இடம் எல்லாம் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது. பெண்கள் அவருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்றனர். கூட்டணி கட்சியினருடன் இணைந்து ஆதரவு திரட்டி வரும் எம்ஆர் காந்திக்கு பல்வேறு இடங்களில் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து அவர் பிரச்சாரத்தில் பேசியதாவது:

நாகர்கோவில் தொகுதியில் தொடர்ச்சியாக வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த அனைவரும் தாமரை சின்னத்தில் வாக்களித்து மீண்டும் என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும். தொகுதிக்குட்பட்ட நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இளைஞர்களுக்கு போதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் நாகர்கோவில் பகுதியில் புதிய தொழிற்பேட்டைகள் கொண்டுவரப்படும். நாகர்கோவில் மாநகரப் பகுதியில் தடை இன்றி தூய்மையான குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள தெங்கம்புதூர், ஆளூர்போன்ற பகுதிகளுக்கு 24 மணி நேரமும் குடிநீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அரசு பஸ்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இலவச பயணம், மகளிர் உரிமைத்தொகை மற்றும் ஆண்டுக்கு 3 இலவச கேஸ் சிலிண்டர்கள் உள்ளிட்ட உன்னத திட்டங்களை செயல்படுத்தப்படும். இத்திட்டங்கள் உங்களை வந்தடைய தாமரை சின்னத்திற்கு வாக்களியுங்கள்.

தமிழகத்தில் தற்போதைய திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது. இளைஞர்கள் போதை பழக்கத்திற்கு அடிமையாகி வருகின்றனர். மக்கள் விரோத ஆட்சியை அப்புறப்படுத்த எனக்கு வாக்கு அளியுங்கள் என அவர் பேசினார்.

# ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு



சேலம், ஏப். 20

சேலம் மாவட்டத்தில் 4 இடங்களில் வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்படுகின்றன. அதன்படி, சேலம் மாவட்டம், 83. ஏற்காடு சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையம், 90. சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையம், 91. வீரபாண்டி சட்டமன்ற தொகுதி வாக்கு எண்ணும் மையங்களுக்கு ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கபடவுள்ளதையொட்டி தேவையான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ள இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பொதுப் பணித்துறையின் மின் பிரிவு, கட்டட, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு அலுவலர்கள், வருவாய்த் துறை, காவல்துறை, அந்தந்த சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து வாக்கு எண்ணும் மையங்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள், பாதுகாப்பு வசதிகள், வாக்குப் பெட்டிகள் இருப்பு அறைகளுக்கான பாதுகாப்பு வசதிகள், கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்துதல், தபால் வாக்குகள் இருப்பு வைப்பதற்கான அறைகளில் தேவையான பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் முழுமையாக ஏற்படுத்திடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திற்கும் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் முழுமையாக மேற்கொள்ளவும், வாக்குப்பதிவு முடிவுற்று வாக்குப் பெட்டிகளை வாக்கு எண்ணும் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள இருப்புஅறைகளுக்கு பாதுகாப்பாக எடுத்து வந்து வைப்பதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் அ.அருண் தம்புராஜ் தெரிவித்தார்கள்.

# வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான 2ம் கட்ட தொடர்ச்சி பயிற்சி வகுப்பு



கரூர், ஏப்.20

134 அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரிலும், 135 கரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப் பதிவு அலுவலர்களுக்கான 2ம் கட்ட தொடர்ச்சி பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் கு.ரவிகுமார் பார்வையிட்டார்.

134 அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1,137 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வள்ளுவர் அறிவியில் மற்றும் மேலாண்மை கல்லூரியில், 135கரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி 1,434 அலுவலர்களுக்கு வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, 136 கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1,423 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு புலியூர் செட்டிநாடு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 137குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1,338 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வள்ளுவர் அறிவியில் மற்றும் மேலாண்மை கல்லூரியிலும், வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், புலியூர் செட்டிநாடு பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியிலும்,

குளித்தலை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 2ம் கட்ட தொடர்ச்சி பயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் கு.ரவிகுமார் பார்வையிட்டார்.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் நேர்மையுடனும், அர்பணிப்புடனும் பணியாற்ற வேண்டும். வாக்குச்சாவடி அலுவலர்களாகிய நீங்கள் வாக்கச் சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் வாக்குப் பதிவு தணிக்கை இயந்திரம் உள்ளிட்ட இயந்திரங்களை எவ்வாறு கையாளுவது, மாதிரி வாக்கு பதிவினை வாக்கு பதிவுக்கு முன்னதாக நடத்தி முடிப்பது, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு செயலி கையாலுவது தொடர்பா விளக்கம் அளிக்கப்பட்டது. என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் கு.ரவிகுமார் தெரிவித்தார்.

இந்த பயிற்சி வகுப்பின் போது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மதியழகன் (கிருஷ்ணராயபுரம்), இந்துமதி (குளித்தலை) மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 100% வாக்குப்பதிவு என்ற விழிப்புணர்வு பதாகைகளுடன் கூடிய இரு சக்கர வாகன பசுமை தேர்தல் விழிப்புணர்வு பேரணி



தருமபுரி, ஏப். 20


தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி, பொதுமக்களிடையே வாக்குப்பதிவு மற்றும் பசுமை விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 100% வாக்குப்பதிவு' என்ற விழிப்புணர்வு பதாகைகளுடன் கூடிய இரு சக்கர வாகன பசுமை தேர்தல் விழிப்புணர்வு பேரணியினை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர். ஹீரா லால் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் முன்னிலையில் தொடங்கி வைத்து,

பேரணியில் கலந்து கொண்டார்கள். பசுமை தேர்தல் விழிப்புணர்வு என்பது, தேர்தல் செயல்முறைகளில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய முன்முயற்சியாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, ஜனநாயகத்தில் ஒவ்வொரு வாக்காளரின் பங்கேற்பை அதிகரிப்பதும், 100% வாக்குப்பதிவை இலக்காகக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி பாரதிபுரம் வரை சென்று நிறைவடைந்தது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி, பொதுமக்களுக்கு 100% வாக்குப்பதிவு மற்றும் பசுமை விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மரக்கன்றுகளை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர்.ஹீரா லால், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் முன்னிலையில் வழங்கி, பசுமை தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி, பொதுமக்களுக்கு 100% வாக்குப்பதிவு மற்றும் பசுமை விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பசுமை தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை தேர்தல் பொது பார்வையாளர் டாக்டர்.ஹீரா லால், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் முன்னிலையில் வழங்கி, விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தருமபுரி தேர்தல் நடத்தும் அலுவலர் இரா.காயத்ரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கே.கவிதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வெ.லோகநாதன், வட்டாட்சியர் ஜெ. சுகுமார், ஆதி பவுண்டேஷன் நிறுவன தலைவர் ஆதிமூலம் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டன.



பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் ஒரே மையத்தில் 11 வாக்குச்சாவடிகளை கொண்ட ராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில் வாக்களிக்கும் வாக்காளர்கள் எளிதில் தங்கள் வாக்குச்சாவடிக்கான வழியினை அறிந்து கொள்ளும் வகையில், மையத்தின் நுழைவாயிலில் இருந்து சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி வரை தரையில் வண்ணங்களால் பாதை வரையப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ந.மிருணாளினி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உதவி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மு.அனிதா மற்றும் பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.